# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

## REA 11/2017 in EP 26/2012 in OS 217/2008

பெயர்: **மணிவாசகம்** நாள்: 14.06.2023

ம.சா.2 – 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை

ம.சா.2 – மணிவாசகம் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.45</u>

1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கு எண் 217/2008 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றம் செய்ய வேண்டி நிறைவேற்று மனு எண் 26/2012 ஐ தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரிதான். அசல் வழக்கு எண் 217/2008 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணை செல்லாது என்று இந்த REA 11/2017 மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான். REA 11/2017 ல் கோரும் பரிகாரத்திற்காக ஏற்கனவே REA 27/2015 ல் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது 17.08.2016 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரிதான். வழக்கு சொத்து 4 ம் எதிர்மனுதாரர் பாலசுப்ரமணியத்திற்கு 21.01.2008 தேதியிட்ட கிரைய ஆவணப்படி பாத்தியப்பட்டது என்றால், சரிதான். நான் வழக்கு சொத்தை 2008 ல் கிரையம் பெற்றேன், தேதி மாதம் ஞாபகமில்லை. நான் வழக்கு சொத்தை கிரையம் பெறும்போது அந்த சொத்திற்கான மூல ஆவணத்தை பார்த்தேன்.

2) நான் கிரையம் வாங்கும்போது மூல ஆவணத்தை என்னிடம் ஒப்படைத்து விட்டார்கள். நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், நான் கிரையம் பெற்ற பிறகு வழக்கு சொத்தை பச்சமுத்து என்பவருக்கு விற்றுவிட்டேன், அப்போது மூல ஆவணத்தையும் அவரிடம் கொடுத்து விட்டேன். நான் மூல ஆவணத்தை பார்க்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நான் வாங்கும்போது வழக்கு சொத்தை பொறுத்து 4 ம் எதிர்மனுதாரர் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு ஒரு கிரைய ஒப்பந்தம் செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால், சரியல்ல. 6 மாதம் கழித்துதான் தெரிய வந்தது. நான் கிரையம் பெறும்போது கிரைய ஒப்பந்தம் குறித்த விபரங்கள் நன்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

3) அசல் வழக்கு 217/2008 குறித்த விபரங்களை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால், நான் கிரையம் பெற்ற தேதியிலிருந்து 6 மாதம் கழித்துதான் தெரியும். அசல் வழக்கு எண் 217/2008 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால், வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த நீதிமன்றத்தில்

எதிர்மனுதாரர்கள்மீது அசல் வழக்கு எண் 49/2009 என்ற வழக்கை விளம்புகை பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கிலும் அசல் வழக்கு எண் 217/2008 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை செல்லாது என்று எந்த பரிகாரமும் கோரியுள்ளேனா என்றால், இல்லை. அசல் வழக்கு எண் 49/2009 ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவிற்கு பின்னிட்டுதான் நான் வழக்கு சொத்தை பச்சமுத்து என்பவருக்கு விற்பனை செய்தேன் என்றால், சரிதான். அந்த ஒருதலைபட்ச உத்தரவானது தற்போது செய்யப்பட்டு தற்போது அசல் வழக்கு எண் 49/2009 வழக்கானது நிலுவையில் இருந்து வருகிறது என்றால், சரிதான்.

4) நான் கிரையம் பெற்ற தேதியிலேயே 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்றால், சரியல்ல. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்தான் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்றாலும், அதை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நான் வழக்கை சொத்தை 23.06.2009 ல் பச்சமுத்துக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால், சரிதான். வழக்கு சொத்தை விற்கும்போது எந்த உரிமையும் இல்லையென்பதால், அந்த விற்பனை செல்லாது என்று சொன்னால், சரியல்ல. பச்சமுத்து என்பவர் 3ம் மனுதாரருக்கு கடந்த 06.06.2011 ல் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால், சரிதான். அந்த பத்திரமும் செல்லாது என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து 3ம் மனுதாரர் அருள்முருகன் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 250/2012 என்ற வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால், சரிதான்.

1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ம.சா.2 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12.15</u>

ஒப்பம்/மணிவாசகம்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.